# இலங்கை துறைமுக அதிகாரசபை

# வெற்றிடங்கள்

இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பிக்கப்படுவது எந்த துறைமுகத்தின் வெற்றிடத்திற்கென விண்ணப்பப்படிவத்தில் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒவ்வொரு துறைமுகம் தொடர்பிலும் வெவ்வேறாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாகும்.

**பதவி : கடற் கல இணைப்பு அலுவலர் (காலி / திருகோணமலை) (Sea Traffic Cordinator)**

**(அ) சம்பளம் :**

சம்பள வகையீடு : 6:3 (SG3)

ஆரம்பச் சம்பளம் : ரூ. 53,425/=

வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,150/=

(மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ. 145,000/= அளவினதாக இருக்கும்)

**(ஆ) தகுதித்திறன் :**

க.பொ.த (உ/தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கரையோர கடற் பயணங்களில் (N.C.V) ஈடுபடும் ST 3000 இற்குக் குறையாத கப்பல்களில் கல அதிபரொருவராக சேவையில் ஈடுபடும் பொருட்டு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசுகளினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் / அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு உயர் மட்டத்திலான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ்.

அல்லது

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு உயர் மட்டத்திலான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசுகளினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான அங்கீகார தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

உலகளாவிய கடல் சார் இடர்கள் மற்றும் பாதுகாப்பு முறைமை (Global Maritime Disaster Safety System) (GMDSS) சான்றிதழ் அல்லது அதற்கு சமனான வேறு சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ரேடார் கண்காணிப்பு சான்றிதழ் அல்லது அதற்கு சமனான சான்றிதழ்.

அத்துடன்

**அனுபவம் :**

கப்பலொன்றில் கடமைப் பொறுப்பு அலுவலரொருவராக ஒரு (01) வருட சேவைக் கால அனுபவம்.

**(இ) ஏனைய கட்டாய தேவைப்பாடுகள் :**

1. அதி உயர் எண்ணலை தகவல் பரிமாற்ற சாதனம் (ஏ.ர்.கு) உபயோகித்து சமிக்ஞை வழங்கும் அறிவு மற்றும் ஆற்றல்.

11. ஆங்கில மொழியில் சிறப்பாக பேசும் ஆற்றல்.

**(உ) வயதெல்லை :**

18 - 45 வயதிற்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல)

**(ஊ) குறிப்பு :**

சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய நேர்முக மற்றும் / அல்லது செயன்முறை பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**கவனிக்க :**

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்டதிட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப அதிகாரசபையின் எந்தவொரு பகுதி / பிரிவில் அல்லது நாட்டின் எந்தவொரு பகுதியில் சேவை புரிய உட்படுத்தப்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியவற்றின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பிரதான முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிருவாகம்), மனித வள மற்றும் நிருவாகப் பகுதி, "இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2024 ஜூன் 24ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கடற்கல இணைப்பு அலுவலர்" பதவிக்கு என தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**